மரபில் எழுதி மரபை வளர்ப்போம்
இலக்கணம் பயின்று இலக்கியம் வளர்ப்போம்
(மரபின் முகவரி)

தனிச்சுற்றுக்கு மட்டும்

# முறுவல்

## சிறப்புக் கவிகள்

*மரபுக் கவிதையின் மாண்பும் பெருமையும்*
*வளமையும் சொல்லில் அடங்குமோ*
*பொருளும் உணர்ச்சியும் வடிவும் கற்பனையும்*
*பொங்கும் மரபுக் கவிதைதான்*
*இருளும் மயக்கமும் இதயத்தில் தங்காத*
*ஏழ்மையும் கொள்புதுக் கவிதையாம்*
*மருள் கொள் மனிதர்கள் மரபினைப் போற்றாது*
*மயங்குதல் என்ன மடமையோ.*

**எழுசீர் மண்டிலம் — ப. முத்துசாமி**

*ஆற்றகல வாய்பெற்று அகல பேசும்*
*அரசியலார் பேச்சினைவாய் பிளந்து கேட்போம்*
*போற்றியேயாம் பிறர்புகழ்ந்து பாழாய்ப் போகும்*
*பாட்டாளி எனுங்கூட்டம் நாங்கள் என்றோ*
*நாற்றெடுத்து விளைவித்தும் நெல்ம ணிக்கும்*
*சிரகத்திற் கும்மாற்றம் அறியா மல்தான்*
*காற்றினைப்போல் சுழன்றுழைக்கும் உழவர் நாங்கள்*
*மாற்றங்கள் வந்தென்று தணியும் தாகம்*

**எண்சீர் மண்டிலம் — இராம.இளங்கோவன்**

*வெற்று மொழியில் வெறுங்கதை பேசும் நிலைவிடுத்தே*
*எற்றை கெழிற்றமிழ் எற்ற முறுமெனும் ஏக்கமுடன்*
*ஒற்றைத் தமிழனிங் கேங்கும் வகையில் உழைக்கவந்தால்*
*நிற்ற பகையோடும் என்பதை நெஞ்சில் நிறுத்துகவே*

**கட்டளைக்கலித்துறை — கருமலைத் தமிழாழன்**

*மணமேடையில் மணவாளனின்*
*மயக்கில் மணமகனின்*
*இணையாய்முக நிலவில் எழும்*
*முறுவல் எழில் காணிர்*
*கனவிலிது நாளாய்க்கண்ட*
*காட்சிஇன்ப நினைவில்*
*புனலும் கடல் அலையில்*
*பெருகும் முறுவல் அழகே*

**மண்டிலம்** **திருவை. அரசு**

## மருட்பா

*ஒப்பில் அணுவியல் ஓங்க அறிவியலார்*
*அப்துல் கலாமின் அரும்பணியை எப்போதும்*
*வாழ்த்தி அவர்வழி வாராய் தமிழினமே*
*விழ்த்தாய் பகைமையை வென்று*
*பிறந்த நாட்டின் பெருமை காக்க*
*சிறந்த கடமையைத் திறமாய் ஆற்று*
*பொன்றா உலகம் போற்றி*
*என்றும் புகழ இருந்தமிழ் வாழ்த்தே!*

**கருவை. மு.குழந்தை**

*என்றும் இளையான் எழிலான் மணிவண்ணன்*
*நன்றருளிக் காப்ப நலஞ்சிறந்து கன்றலின்றி*
*அன்னைபோல் தூக்கி அணைத்திடச் செய்திடுவான்*
*கண்ணபிரான் பக்தியினால் கல்லாம் மனமுருகும்*
*துன்பம் வரினும் துடைத்தெறியும் தேவனாம்*
*கண்ணன் அருளால் கவலையெல்லாம் தூளாகும்*
*சீரும் பொருளும் சிறந்து மிகப்பெரிய*
*ஆரும் புகழ அறிவோர்தம் நட்பமைய*
*நாளும் நாளும் வாழிய*
*கேளும் நண்பரும் கெழுமிப் பொலியவே.*

**ந.அரிமர்த்தன பாண்டியன்**

*ஒருமைக்கண் கல்வியை ஓதிடின் நன்றே*
*வருமாம் எருமைக்கும் மாண்பே - திருவளிக்கும்*
*கல்வி பிழையறக் கற்றபின் என்றென்றும்*
*நல்வழி கண்டே நடந்து*
*செல்லு மிடத்து சிறப்பினைப் பெற்றிட*
*அல்லும் பகலும் அயர்விலா(து) ஓதி*
*அழியாக் கல்வியை அளித்து*
*விழுமிய ராக விளங்கிடு வீரே*

**தேவகி ஆனந்து.**

*பையவே நாவசைத்த பைந்தமிழே என்றுமுள*
*வையத்தின் தொன்மொழியே வானின் திருவிளக்கே*
*சொல்லில் பொருளில் சுவையூட்டி வாழ்வியலில்*
*வெல்லும் வழிகள் விளம்பும் திறன்பெற்ற*
*எம்மொழிக்கும் ஈடாகா ஏற்ற வளம்கொண்ட*
*செம்மொழியே செந்தமிழர் செல்வமே சீர்த்திமிகு*
*எட்டுத்தொகையாலும் ஈரைந்து பாட்டாலும்*
*மட்டில் பதினெண் கணக்காலும் ஐம்பெரும்*
*காப்பியங்க ளாலும் கணக்கற்ற செம்புலமை*
*யாப்பு வளத்தாலும் யாவர்க்கும் - காப்பரணாய்*
*நிற்கும் திறத்தினால் நின்புகழ்*
*பொற்புடன் திகழ்ந்திடும் போற்றுவம் இனிதே*

**கடவூர் மணிமாறன்**

*தமிழே உமக்கிவண் ஈடிலை தாக்க*
*அமிழ்தே அகிலத்தை அன்பாய்க் கமழ்ந்திடக்*
*காணும் முதல்மொழியே கன்னித் தமிழே நீ*
*வான முழுநிலவே வண்ணத் தமிழ்ப் பாட்டே*
*எங்களை உயர்த்தி இனிமை காணும்*
*மங்காப் புகழே; மாண்பே மணியே*
*உலகம் புரக்கும் உன்னதமே!*
*கலையே களஞ்சி யமே நீ வாழி.*

**இராம. வேதநாயகம்**

## மருட்பா மார்ச் – 2017

*தந்தையார் தந்ததை தன்வயிற்றிலே சுமந்து*
*அந்திபகல் எப்பொழுதும் அன்பின் மெருகேற்றி*
*சார உணவால் சரியாய் உருப்பெருக்கி*
*வீர அறிவு விளைவிக்கும் நினைவேந்தி*
*மண்ணில் பிறக்கும் நாள் மட்டில் வலிதாங்கி*
*கண்ணாரக் கண்டு களித்து*
*பிஞ்சு மேனியைப் பீடுற அணைத்து*
*கொஞ்சு மழலை குளிரக் கேட்டே*
*உண்ணலில் உடுத்தலில் உணர்வாய் வளர்த்தலில்*
*எண்ணிலா அக்கறை எழிலுறக் காட்டி*
*நிறைவெலாம் தந்தே நிற்பவள்*
*இறைநிகர் அன்னையாம் என்றறி வாயே*

**செவியறிவு** **திருக்குறள் நாவை. சிவம்**

*அமிழ்தினில் நஞ்சை அனைதலைப் போலத்*
*தமிழில் பிறமொழிச்சொல் தான்கலந்து கேடு*
*புரியும் மதியிலீர் புன்மை தவிர்ப்பீர்*
*நரிப்பகைவர் சூழ்ச்சி நசுக்க - அரியென*
*ஆர்த்தே எழுவீர் அருத்தமிழ் மறவீர்*
*போர்க்களம் பிறந்த புலியென வளர்ந்து*
*களிறென நிற்கும் கடுந்திறல் இளையீர்*
*தெளிதமிழ் செழிக்க தீதிலா வழியோ*
*தனித்தமிழ் எழுதியும் பேசியும்*
*பணிபல துறைதொறும் பாடாற்றல் நன்றே!*

**செவியறிவு** **ப. எழில்வாணன்**

---

## சொல் அறிவோம் – கூலி:– வை.மு.கும்பலிங்கனார்

*வேலை செய்யும் ஆட்களுக்குப் பகரமாக: ஈடாகத் தருவது கூலி ஆயிற்று கூலம் என்பதற்கு தானியம் என்பது பெயர் பழங்காலங்களில் வேலை செய்பவர்க்கு பகரமாக தானியங்களை அதாவது கூலங்களை தந்தார் என்பது வரலாறு. அந்த கூலமே தற்போது மருவி கூலி ஆனது.*

*செந்தமிழை நீபேசு சித்தம் தெளிவாகும்*
*வந்தமொழி யாவும் வெருண்டோடும் - சொந்தமொழி*
*இங்கிருக்க வெற்றுமொழி ஏன்தேடு கின்றாயோ*
*அங்கதம் நம்மை அணுகி நிலைபெறும்*
*முத்தமிழுக் கீடான மூத்தமொழி இல்லையே*
*பெற்றவளுக் கீடென்றோ பைந்தமி ழென்றுமே*
*கண்டமொழி பேசி வழுஉ செய்கின்றாய்*
*காவியம் பலதந்த கனித்தமிழை*
*சேவித்துப் பழகிடக் கற்றுக்கொள் மனமே*

**கே.வி.ஜெனார்த்தனன்**

*கற்கத் தகுவன கற்றலும் பின்அதை*
*பற்றலும் பற்றி ஒழுகலும் நன்றே!*
*அறிவும் தெளிவும் அடைவுறுங் கல்வி*
*உரியநற் கல்வியே ஊக்குவ தாகலின்*
*கண்ணா யொருவன் கருதத் தகுவன*
*நல்லதோர் கல்வி நாடொறும் ஊக்கிடச்*
*செல்வம் பிறவெலாம் புகழுரை யினவெலாம்*
*என்னவாம் கல்விதான் இல்லா தார்க்கு*
*என்பதை ஓர்மின் ஏற்றம் பெறவே*
*மன்பதைக் காவது மாண்புறு கல்வியே.*

**பொன். இனியன்**

***(மருட்பா சிறப்பிதழ் தொடரும்)***

## பொது

*பெண்மை வாழும் உலகில் உண்மை*
*உண்மை ஆய்ந்தால் விளங்கும் பெண்மை*
*இன்ப உணர்வில் இயங்கிடும் பெண்மை*
*இனிய உயிர்கள் எழுந்திடும் உண்மை*
*கருவறை யில்தங்கி களத்தில் வீழ்ந்து*
*உருவம் பதித்து ஓங்கும் வாழ்வில்*
*அன்பு கருணை அமைதி அணைப்பு*
*பண்பில் வளர பதித்த ஒழுக்கமும்*
*அன்னை ஒருவரே ஆகும் தெய்வமே!*

**ஆசிரியப்பா** **இரா.இ.அரங்கசாமி**

*பலகோள்களும் இயக்கம்பெற முதலாம்கதிர் நிகராய்*
*நலமேமனை உறைவோர்க்கெலாம் முதலாமவர் மனையாள்*
*குலமேமகி ழொளியேதர வரமானவள் அவளே*
*நிலமோங்கிட பருவந்தரும் அனவாய்ப் பொழிமழையே*

**சந்தக்கலி விருத்தம்** **து.வே.கணேசன்**

*மண்ணில் மணிதம் மலர மகாமுனி*
*பண்ணில் படைத்தனன் பா*
*தீண்டாமை தீதான தீமைசெய் தீயசெயல்*
*தீண்டன்மீர் தீண்டின் தீதே*

**இளங்கரு இறையனார்**

*பெற்றோர்தம் பாசமும் பிள்ளைகள் பின்னொருநாள்*
*உற்றபடி உய்விப்பான் என்றேங்கும் - பற்று*
*சிறிதுமின்றி எல்லோர்க்கும் சீர்கல்வி நல்கும்*
*பெரியராம் ஆசிரி யர்*

**வெண்பா** **வெ. நாதமணி**

*இந்நில மாந்த னியம்பும் மொழியினுள்*
*வந்தமரும் வெற்றுச் சொல் வேம்பு*
*இறவா மொழியாய் தமிழிருக்க அந்தோ*
*இரவல் அயல்சொல் எதற்கு*

**செல்ல கணேசன்**

---

**கவிஞர்களின் கவனத்திற்கு...**

மரபுக்கவிதை யெழுதப் பயன்படும் நூலான கி.வா.ஜ.வின் கவிபாடலாம். - 'நூலில்' அகத்துறைக்குச் சிறந்தவை கலிப்பாவும் பரிபாடலும் என்று தொல்காப்பியர் சொல்கிறார் (பக்கம் -82) என்பதின் அடிப்படையில் நமது அன்பர் ப.எழில் வாணன் அவர்களின் சீரிய முயற்சியால் பரிபாடல் என்ற பாவகையில் பரிபாடல் எழுதியுள்ளார் அதன் இலக்கணம் கீழே தந்துள்னேன்.

அடிவரையறை 25 முதல் 30 அடிகள்; பாடுபொருள்: அவரவர் விருப்படியாக தாளில் பாடுபொருளை தலைப்பாக குறிப்பிட்டு; பாவகை; பரிபாடல் என்று குறிப்பிட்டு அனுப்புங்கள் ஒருவர் எத்தனை பாவேண்டுமானாலும் அனுப்பலாம். தொடர்பு கொள்ள ப.எழில் வாணன்; 9443377464

*நல்லுணவால் முறுவலிக்கும் நாக்கு மற்றும்*
*நன்மணத்தால் முறுவலிக்கும் மூக்கு மேலும்*
*நல்லபொருட் காட்சியினால் கண்கள் தாமும்*
*நாளெல்லாம் முறுவலிக்கும் காதும் காதும்*
*நல்ல சொற் கேட்பதால் முறுவ லிக்கும்*
*நன்மாலை பெறு(ங்)கழுத்து முறுவலிக்கும்*
*நல்லவழி காட்டிவிட்டால் கால்கள் தம்பி*
*நன்னெறியின் வழிநடத்தே முறுவலிக்கும்*

**எண்சீர் மண்டிலம்** **தமிழப்பனார்**

*நான்நான் என்பது ஆணவம் ஆமோ*
*நானார் அறிகில்லேன்*
*நமன்வந் துறவுகொண் டேகிய பின்பு*
*நடப்பதென் உணர்கில் லேன்*
*தேனார் வையத் தேடுதல் வேட்டையில்*
*தினமும் இழைகின் றேன்*
*செந்தமிழ் அமுதம் சிந்தையில் பெருகத்*
*தினவால் மகிழ்கின்றேன்*

**அறுசீர் மண்டிலம்** **தமிழ்க் குழவி**

## பொது

*ஊரினுள் மூத்தோர் செப்பும்*
*உன்னத வீரச் செய்தி*
*தேரினில் பூட்டும் மாபோல்*
*திண்மையில் வீரர் நாளும்*
*போரினில் வெற்றி கொண்டே*
*புத்தொளி நாட்டில் மேவ*
*காரினில் மின்னல் போல*
*காளையர் காக்கும் நாடே!*

**முல்லை முகுந்தன்.**

*காவினுள் தோன்றும் கள்ளம்*
*கண்ணெதிர் வஞ்சம் நீக்கி*
*பூவினுள் நாகம் அன்ன*
*பொய்யாரின் சூழ்ச்சி போக்கி*

*கோவினுள் சேதி கூறி*
*கூடியே காக்கும் மக்கள்*
*நாவினில் வாய்மை கொண்டே*
*நாட்டையும் தாய்போல் காப்பர்,*

**அறுசீர் மண்டிலம்** **தமிழ்க்குழவி**

## குழந்தை பாடல்

*அழகு நிலவை விண்ணில் பார்*
*அதனின் ஒளியை மண்ணில் பார்*
*அழகு விண்மீன் கூட்டத்தில்*
*அரசி யாக அமர்ந்திருப்பாள்*
*நிலவு தேய்ந்து பிறையாகி*
*நிற்கும் ஒருநாள் வாராமல்*
*நிலவு வளர்ந்து முழுநிலவாய்*
*நின்றே ஒளிரும் அழகுடனே*

**தேவகி ஆனந்து**

*கந்தன் வீட்டுத் தோட்டத்தில் - ஆ!*
*..கண்ணை உருட்டும் முயல்குட்டி!*
*பந்தைப் போல உருண்டோடும்*
*..பஞ்சு மேனி..! படுசுட்டி!*

*குழந்தை ‘கேரட்’ நீட்டிநின்றால்*
*...கொஞ்சி நாக்கை நீட்டிடுமாம்!*
*கிழவர் வந்தால் பயந்தேபோய்*
*...கீச் கீச் என்றே ஓடிடுமாம்!*

*முட்டைக் கோசைக் கடித்திடுமாம்!-(எனை)*
*...முட்டைக் கண்ணால் பார்த்திடுமாம்!*
*வட்டம் போடும் கழுகுகண்டால்,*
*....வாகாய் வளைக்குள் பதுங்கிடுமாம்!*

*தோட்டத் துக்கே நான்வந்தால் - ஓ!*
*...துள்ளி அருகே வந்திடுமாம்!*
*ஆட்டம் காட்டி விளையாடி-*
*...அழகாய் மூக்கால் கொஞ்சிடுமாம்!*

*கந்தன் வீட்டுத் தோட்டத்தில் - அட!*
*...கண்ணை உருட்டும் முயல்குட்டி*

**கவியோகி வேதம்**

## பரிபாடல்

***(புலவர் ப.எழில்வாணன்)***

'பரிந்த பாட்டு பரிபாட்டெடன வரும்' என்பர்: பரிந்து வருவது என்பது பல வடிவம் பெற்று வருவதாம் பரிபாடல் என்பது இன்னபா என்னும் வரையறை இல்லாமல் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் நான்கு பாவும் கலந்து வரும் ஒரு பாவாகும்.

*"பரிபா டல்லே தொகை நிலை வகையின்*
*இதுபா என்னும் இயனெறி இனறிப்*
*பொதுவாய் நிற்றற்கும் உரித்தென மொழிப"*

(தொல். பொருள்; செய்; 119)

என்பது தொல்காப்பியம்,

பரிபாடல் நால்வகைப் பாவிற்கும் பொதுவாய் நிற்றற்கு உரியது எனினும் சிறப்பாக வெண்பா யாப்பிற்கு குட்பட்டு அமையும் என்பது தொல்காப்பியர் கருத்தாகும்.

*"நெடுவெண் பாட்டே குறுவெண் பாட்டே*
*கைக்கிளை பரிபாட்டு அங்கதச் செய்யுளோ(டு)*
*ஒத்தவை எல்லாம் வெண்பா யாப்பின"*

(தொல். பொருள். செய்: 117)

பரிபாடல் பல்வேறு உறுப்புகளைப் பெற்றுவரும் கொச்சகம், அராகம், சுரிதகம், எழுத்து ஆகிய நான்கும் பரிபாடலின் உறுப்பாகத் தொல்காப்பியர் கூறுவார்.

*"கொச்சகம் அராகம் சுரிதகம் எருத்தொடு*
*செப்பிய நான்கும் தனக்குறுப் பாகக்*
*காமம் கண்ணிய நிலைமைத் தாகும்"*

(எருத்து =தரவு) (தொல்.பொருள்.செய்: 120)

மேலும், சொற்சீரடி (தனிச்சொல்), முடுகியலடி ஆகியவையும் பரிபாடலுக்கு உரியன என்பார் தொல்காப்பியர்,

விமர்சனங்கள், படைப்புகள், கடிதங்கள் அனுப்ப : **முறுவல் இதழ்**
அஞ்சல் பெட்டி எண். 7209 ஜவஹர் நகர் அஞ்சலகம்
சென்னை - 600 082. கைப்பேசி - 98402 91716
email : marabinmuruval@gmail.com
கூரியர் / தனியார் அஞ்சலுக்கு இம்முகவரியை பயன்படுத்தினால்
கடிதம் திரும்பிவிடும். ; இம்முகவரியின் மூலம் பணம் அனுப்பக் கூடாது.

*“சொற்சீ ரடியும் முடுகிய லடியும்*
*அப்பா நிலைமைக் குரிய வாகும்”*

(தொல். பொருள். செய்: 121)

கொச்சகம் என்பது கலிப்பா வகையுள் ஒன்றாகும். ஆனால் அதுவே பரிபாடலின் உறுப்பாகவும் உள்ளது என்பதை மேற்கண்ட நூற்பாவால் அறியலாம்.

சுருங்கக் கூறின் பரிபாடல் உறுப்புகள் ஐந்து ஆகும். அவை தரவு (எருத்தம்), தனிச்சொல், சுரிதகம், அராகம், அம்போ தரங்கம் (நீரலை) என்பனவாம்.

அராகமும், முடுகியலும் ஒன்றே என்னும் நுட்பமான வேறுபாடு டையவை: “முடுகியல் தானே நிரைநிரை என முறை அமைவுறும்” என்று யாப்பு நூலில் சரவணத் தமிழன் கூறுவார். “முடுகியல் என்றும் கூறியது குறில்கள் அடுத்தடுத்து முடுக்கிவரும் முறைமை பற்றி” எனவும் விளக்குவார், எனவே, அராகத்தில் சிறுபான்மையாக நெடிகள் வரலாம்: முடுகியலில் குறில்களே வரவேண்டும் என்பதே தெளிவாம், எனவே தான், தொல்காப்பியர் பரிபாடல் உறுப்பாக அராகத்தைக் குறிப்பிட்டுப் பின்னும் முடுக்கியலைக் குறிப்பிடுகிறார், ‘கூறியது கூறலன்று என்பதை அறிக.

தொல்காப்பியர் கருத்தால் காமம் பொருள் பற்றியே பரிபாடல் வரும் என்பதை மேற்குறித்த நூற்பா அடியாலும், (“காமம் கண்ணிய நிலைமைத் தாகும்”) நாடக வழக்கால் புனைந்துரைத்தும், உலகியல் வழக்கால் இயல்பாகவும் அகப்பொருளைப் பாடுதற்கு உரியவை பரிபாடலும் கலிப்பாவும் ஆகும் என்பதை,

“நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்
கலியே பரிபாட்டு ஆயிரு பாங்கினும்
உரிய தாகும் என்மானார் புலவர்”

(தொல், பொருள், அகம்: 53)

என்னும் நூற்பாவாலும் அறியலாம்.

ஆனாலும் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான “பரிபாடல்” என்னும் நூலில் பரிபாடலுக்குரிய இலக்கணத்தோடு தெய்வத்தைப் பற்றியும், ஆற்றைப் பற்றியும் இறையுறை இடங்களை (திருப்பதிகளை)ப் பற்றியும் பாடல்கள் அமைந்திருப்பதைக் காணலாம். இது காலத்திற்கேபப் பரிபாடல் பெற்ற வளர்ச்சியைக் காட்டுகிறது. எனவே புதியன புகுதலாக இனிப் பரிபாடலில் எப்பொருள் பற்றியும் பாடலாம் என்பதை ஏற்போமாக,

பரிபாடலின் அடிவரையறை பற்றிச் தொல்காப்பியர்

*"பரிபாட் டெல்லை*
*நாலீ ரைம்பது உயர்படி யாக*
*ஐயைந் தாகும் இழியடிக் கெல்லை"*

(தொல். பொருள். செய்: 160.)

என்று கூறுகின்றார்.

அதாவது சிற்றெல்லை 25 அடிகள்பேரெல்லை 400 அடிகள்.

பரிபாடலின் உறுப்புகள், கலிப்பாவின் உறுப்புகளே, (தாழிசை பரிபாடலில் இல்லை) எனவே உறுப்புகளின் அடிவரை யறைகளைச் கலிப்பா இலக்கணத்தால் அறிந்து கொள்க, இருப்பினும் சுருக்கமாகச் சில குறிப்புகள்

தரவு - சிறுமை 3 அடி - பெருமை 12 அடி

சுரிதகம் - சிறுமை 2 அடி - பெருமை தரவை ஒத்தும் மிகுதியும் வரலாம்

அராகம் - 4 அடி - பெருமை 8 அடி

இனித் தொகுப்பாக:-

1. பரிபாடல் முன் குறிப்பிட்ட ஐந்து உறுப்புகளைப் பெற்றுக் கலிப்பா போல வரலாம்.(தாழிசை வராது)
2. அல்லது இவ் உறுப்புகள் இல்லாமல் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகிய நால்வகைப்பா அடிகளை இடையிடை கலந்து வெண்பா போல் முடியும் கொச்சக மாக வரலாம். அல்லது நேரிசை ஆசிரியப்பாபோல் முடியும் கொச்சகமாக வரலாம்.
3. பல அடிகளால் ஆசிரியம் போல வரலாம். இடையிடை குறளடியும் சிந்தடியும் கலந்து வரலாம். தனிச் சொல்லும் இடையிடை வரலாம்.
4. இறுதி வெண்பாச்சுரிதகமாகவோ, ஆசிரியச்சுரிதகமாகவோ முடிதல் வேண்டும்.

***அடுத்த இதழ் ஆகஸ்டு 2017***

---

***அடுத்த முறுவல் இதழில் குழந்தைக் கவிதைகள் சிறப்பிதழாக வரும். படைப்புகள் வேண்டப்படுகின்றன.***

---

*ஒளி அச்சு :* ரெயின்போ கிராபிக்ஸ், சென்னை - 5, அலைபேசி : 97105 90200

**தனிஇதழ் - ரூ.10/-** **ஆண்டு இதழ் - ரூ.50/-**

**தை, மாசி, பங்குனி** **மார்ச் - 2017**

**உலகத் தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்க உறுப்பினர் எண். 131/09/14**

சு. சா. அரவிந்தன்

## இதழாசிரியர் குறிப்புகள்

படைப்புகள் அனுப்புவோர் முகவரியில் ஆசிரியர் பெயரைக் குறிப்பிடாமல் அதற்கென உள்ள முகவரியைப் பயன்படுத்தவும். சந்தா அனுப்ப வேறு முகவரி. அஞ்சல்பெட்டி எண்ணை மட்டும் பெரிய எழுத்தில் குறிப்பிட்டால் கடிதங்கள் தவறாது. ஒவ்வொரு முறையும் முழுமுகவரி இருத்தல் நலம்; உடனே கடிதம் அனுப்ப உதவும். கூரியரில் அனுப்புவோர் சந்தா அனுப்புவதற்கு உள்ள முகவரியை மட்டும் பயன்படுத்தவும். பாவகையை சரிபார்த்து குறிப்பிட்டு அனுப்பவும். மின்னஞ்சல் முகவரி இருப்பின் தவறாது தெரியப்படுத்தவும்.

---

இதழுக்கு சந்தா அனுப்புவோர்
1ரூ. அஞ்சல் தலைகளாகவும் அனுப்பலாம்.

---

பணவிடை, சந்தா மற்றும் கூரியர் அனுப்ப :

**சு. சா. அரவிந்தன்**
62B, G2, விநாயகா நிவாஸ், 4வது குறுக்குத்தெரு, C-பிரிவு,
தணிகாசலம் நகர், பொன்னியம்மன் மேடு (அஞ்சல்) 600 110.
email : marabinmuruval@gmail.com

Bank A/c.No. 32604044388
IFSC Code : SBIN0010515
ARAVINDAN. S.S

---

**BOOK PACKET CONTAINING PRINTED BOOK**
**அச்சிட்ட புத்தகக்கட்டு**

---

தொடுதல் :

______________________

______________________

______________________

______________________

______________________

______________________

| அஞ்சல் தலை |
|---|

அ.கு.எண். | | | | | | |